2018-ம் வருடம் நவம்பர் மாதம் 2-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.சோ.பார்த்தசாரதி. B.P.T.M.Sc.(Psy).,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

---------

1. இந் நகராட்சிக்கு 2018-19-ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் மேற்க்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.22866/2018/பி3 ,நாள்.23.08.2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்கு 17.10.2018ல் இரண்டாவது முறையாக இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப தகுதியினை ஆராய்ந்து தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப் புள்ளிகளை (PRICE BID) 31.10.2018ம் தேதி அன்று திறப்பு செய்யப்பட்டது. தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் 28 எண்ணிக்கை சப்ளை செய்தல். | 50.40 | 1.மெஸர்ஸ்.அருண் இன்டியன் மோட்டார்ஸ், சேலம் | 0.28% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | 2.பிரியம் இண்டஸ்டீரீஸ் & இன்ஜினீர்யங் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 0.06% மதிப்பீட்டை விடஅதிகம். |

அலுவலகக்குறிப்பு:-அ.மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெஸர்ஸ்.அருண் இன்டியன் மோட்டார்ஸ், சேலம் நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதை அங்கீகரிக்கலாம்.

ஆ. மேற்படி திட்டத்தின் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1093/2016/இ1

தீர்மானஎண்: 107: அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**2.** இந்நகராட்சியின் **2017–2018**ம் ஆண்டிற்கான ஆண்டு கணக்கினை (வருவாய் நிதி,மூலதனநிதி,குடிநீர்(ம) வடிகால்நிதி மற்றும் ஆரம்பக்கல்வி நிதி) உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்ப வேண்டி புதிய கணக்கு முறையில் ஆண்டு கணக்கினை தனியார் மூலம் தயார் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**85000/–**த்திற்கு அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u> அனுமதிக்கலாம்

ந.க.எண்.**152/2016**/பி2

தீர்மானஎண்: 108அனுமதிக்கப்பட்டது.

3. இந் நகராட்சியில் 2018-19ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பணியான பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் சப்ளை செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க வேண்டி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணத் தொகை ரூ.1,10,729/-ஐ (ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரத்து ஏழு நூற்று இருபத்தொன்பது மட்டும்) சென்னை எலிகண்ட் பப்ளிசிட்டிஸ் நிறுவனத்திற்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி தொகையை வருவாய் நிதியிலிருந்து செலுத்தவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.331/2018/இ1

தீர்மானஎண்: 109அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந் நகராட்சிக்கு சொந்தமான உமர்ரோடு நகராட்சி துவக்கப்பள்ளி கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், வர்ணம் பூசவும் மற்றும் மீட்டர் பாக்ஸ் மாற்றி அமைக்கவும், அதற்காகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை கல்விநிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1260/2018/இ1

தீர்மானஎண்: 110 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சியின் அலுவலக ஈப்பு வாகன எண் TN83 Y9506-க்கு தேவையான 5 எண்ணிக்கை Radial Tubeless டயர்கள் சப்ளை செய்ய Bridge Stone நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற Wheels and Tyres, Vellore டீலரிடமிருந்து டயர்களை வாங்கிக்கெள்ள ஆகும் செலவினத் தொகை ரூ 37,500/-க்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அங்கீகாரம் வழங்கலாம், மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்
2. அலுவலக பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**(ந.க. எண்: 1207/2018/இ2)**

தீர்மானஎண்: 111 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சிக்கு சொந்தமான நாகேஸ்வரன் கோவில் எதிரே உள்ள சமுதாய கட்டிடத்தில் நகர வாழ்வாதார சேவை மையம் துவங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் நக. N1/197/2017 நாள்: 16.02.2018-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கட்டிடத்திறக்கு மும்முனை இணைப்பு மிம்சார இணைப்பு பெற ஆகும் செலவினத் தொகை ரூ 6500/- ஐ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்க்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
3. மேற்கண்ட திட்ட பணியின் அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண். 225/2018/இ2

தீர்மானஎண்: 112 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந்நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினத் தொகை ரூ 2,20,000/-க்கு அங்கிகாரம் கோரப்படுகிறது.

| Sl. No | Description of Item |
|---|---|
| 1 | Providing Internet and Internet arrangements to Municipal office. |

அலுவலக பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 26.10.2018-ம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| நிறுவனத்தின் பெயர்<br>திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|
| 1.ஜி.ஆர். சிஸ்டம்ஸ், ஆம்பூர் | ரூ. 2,19,580/- |
| 2. சிவா எலக்ரானிக்ஸ், ஆமபூர் | ரூ. 2,20,250/- |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்குறிப்பிட்டுள்ள பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினத் தொகைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஜி.ஆர். சிஸ்டம்ஸ், ஆம்பூர் என்பவரின் ஒப்பந்தபுள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.1189/2018/இ2**

தீர்மானஎண்: 113 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. இந் நகராட்சியில் 2016-17ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.85,370/-ஐ உள்ளாட்சிநிதி தணிக்கைக்கு செலுத்த கோரி உதவி இயக்குனர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை வேலூர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. அனுமதி வழங்கலாம்.

2. 2018-19ம் ஆண்டு வரவு, செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1011/2017/எப்1

தீர்மானஎண்: 114 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. இந் நகராட்சியில் பிறப்பு/ இறப்பு கட்டணத்துடன் ரூ.20/-ம்,சொத்துவரி/ குடிநீர் பெயர் மாற்ற மனு, குடிநீர் இணைப்பு கட்டணம் , அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமக்கட்டணத்துடன் ரூ.50/ம், கட்டிட அனுமதி மற்றும் சுகாதார சான்று கட்டணத்துடன் ரூ.100/-ம் சேர்த்து படைவீரர் கொடிநாள் நிதியாக வசூல் செய்ய அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1039/2018/எப்1

தீர்மானஎண்: 115 அனுமதிக்கப்பட்டது.

10. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை செம்மையாக செய்யவும், இந்நகரின் 36 வார்டுகளில் சேரும் குப்பைகள் மற்றும் கால்வாய் மண்களை தினமும் சேகரிக்கப்பட்டு வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு கொட்டப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளை செய்யவும், வாகனங்களை இயக்கவும் ஓட்டுனர்கள் பற்றாக்குறையாக உள்ளது. எனவே அவசர அவசியம் கருதி மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் 10 எண்ணிக்கை ஓட்டுனர்கள் தேவை என்பதால் 30.10.2018-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளிதொகைநாள் ஒன்றிற்கு ஒருமணி நேரத்திற்கு ரூ. |
|---|---|---|
| 1 | ஜி.பிரபாகரன், ஒப்பந்ததாரர், ஆம்பூர். | 394.50 |
| 2 | எம்.உதயகுமார், ஒப்பந்ததாரர், ஆம்பூர். | 397.50 |

அலுவலகக்குறிப்பு: அ. மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஜி.பிரபாகரன், ஒப்பந்ததாரர், ஆம்பூர் அவர்கள் வழங்கியுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ஆ. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஜி.பிரபாகரன், ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.1778/2018/எச்1
தீர்மானஎண்: 116 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**11.** ஆம்பூர் நகராட்சி **17.97** சதுர கி.மீ. பரப்பளவுடன் **36** வார்டுகளாக அமைந்துள்ளது. **2011** மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகராட்சியின் மக்கள் தொகை **1,14,608** இந்நகராட்சியில் தற்போது தினசரி **10.40** மில்லியன் லிட்டர் குடிநீர், நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு **90.74** லிட்டர் என்ற அளவில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வழஙகப்பட்டு வருகிறது.

பார்வையில் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், **2018–19**ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.**34–**ற்கான விவாதத்தின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல், சிறப்பு திட்டஙகள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு எண்.**14**ல் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*“மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழஙக தானியஙகும் குடிநீர் மையஙகள் (Automatic Vending Centers) நிறுவப்படும்”*

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு **1** வீதம் தானியஙகும் குடிநீர் மையஙகள் *(Automatic Vending Centers)* தனியார் தொழில் நிறுவனஙகளுடன்/ தொழிற் முனைவோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று (Corporate Social Responsibility fund) செயல்படுத்தவும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கஙகளை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்யவும் பார்வையில் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சியில் அமைந்துள்ள **36** வார்டுகளிலும் தானியஙகும் குடிநீர் மையஙகள் *(Automatic Vending Centers)* அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தானியஙகும் குடிநீர் மையஙகள் *(Automatic Vending Centers)* அமைப்பதற்கான மதிப்பீடு விவரஙகள் பின்வருமாறு.

| **வ. எண்.** | **வார்டு எண்.** | **மதிப்பீட்டு தொகை ரூபாய் லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | 1 | 18.00 |
| 2 | 2 | 18.00 |
| 3 | 3 | 18.00 |
| 4 | 4 | 18.00 |
| 5 | 5 | 18.00 |
| 6 | 6 | 18.00 |
| 7 | 7 | 18.00 |
| 8 | 8 | 18.00 |
| 9 | 9 | 18.00 |
| 10 | 10 | 18.00 |
| 11 | 11 | 18.00 |
| 12 | 12 | 18.00 |
| 13 | 13 | 18.00 |

| | | |
|---|---|---|
| 14 | 14 | 18.00 |
| 15 | 15 | 18.00 |
| **வ. எண்.** | **வார்டு எண்.** | **மதிப்பீட்டு தொகை ரூபாய் லட்சத்தில்** |
| 16 | 16 | 18.00 |
| 17 | 17 | 18.00 |
| 18 | 18 | 18.00 |
| 19 | 19 | 18.00 |
| 20 | 20 | 18.00 |
| 21 | 21 | 18.00 |
| 22 | 22 | 18.00 |
| 23 | 23 | 18.00 |
| 24 | 24 | 18.00 |
| 25 | 25 | 18.00 |
| 26 | 26 | 18.00 |
| 27 | 27 | 18.00 |
| 28 | 28 | 18.00 |
| 29 | 29 | 18.00 |
| 30 | 30 | 18.00 |
| 31 | 31 | 18.00 |
| 32 | 32 | 18.00 |
| 33 | 33 | 18.00 |
| 34 | 34 | 18.00 |
| 35 | 35 | 18.00 |
| 36 | 36 | 18.00 |
| **மொத்தம்** | | **648.00** |

ஆம்பூர் நகராட்சியில் உள்ள 36 வார்டு பகுதிகளில் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) அமைக்கும் பணி மேலே பட்டியலில் கண்டுள்ள மதிப்பீட்டின்படி மேற்கொள்ள “Expression of Interest” கோரவும் இத்திட்டப்பணிக்கான முழுத் தொகை மற்றும் பராமரிப்புச் செலவினம் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களில் பங்களிப்பு பெற்று இத்திட்டம் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டி திட்டபிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் அங்கிகாரம் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அங்கிகாரம் வழங்கலாம்

**ந.க. எண்: இ2/1062/2018**

தீர்மானஎண்: 117 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஒம்/- சோ.பார்த்தசாரதி.
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி

/உண்மைநகல்/

ஆணையாளர்,
ஆம்பூர் நகராட்சி